**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - O.S.No.162/2010 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | சத்யநாராயணன் | தொழில்: |
| த/பெ.: | | மதம்: |
| கிராமம்: | | ஜாதி: |
| வயது: | | வட்டம்: காஞ்சிபுரம் |

**முதல் விசாரணை: - 12.01.2023**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 33 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவைகளை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Certified Copy Preliminary Decree passed in OS 73/1949, 25.11.1954 – Ex.A.1

2. Certified Copy Sketch of suit property in OS 73/1949, 25.11.1954 – Ex.A.2

3. Certified Copy Final Decree in OS 73/1949, 10.08.1972 – Ex.A.3

4. Certified Copy Registered Will, registered as Doc.No.15 of 1975, Book – III, executed by L.Devarajalu Reddy in favour of the Plaintiff, 26.06.1975 – Ex.A.4

5. Certified Copy Affidavit and Petition to implead legal heir in IA.No.315/1977 in C.R.O.P.No.57/1973, 19.09.1977 – Ex.A.5

6. Certified Copy Registered Deed of Sale, registered as Doc.No.3332 of 1983 executed by P.Saketharaman in favour of P.Venugopal, 03.10.1983 – Ex.A.6

7. Certified Copy Registered Deed of Sale, registered as Doc.No.2302 of 1989 executed by D.Venkatarama Reddy in favour of S.P.Vairavan, 19.06.1989 – Ex.A.7

8. Certified Copy Registered Deed of Sale, registered as Doc.No.2825 of 1983 executed by P.Venugopal and others in favour of M.Vidhya, 21.07.1989 – Ex.A.8

9. Certified Copy Patta issued in favour of the Plaintiff, 10.03.1993 – Ex.A.9

10. Certified Copy Affidavit and Petition to receive cheque amount in IA.No.236/1993 in C.R.O.P.No.57/1973, 25.10.1993 – Ex.A.10

11. Original Revenue Patta – Ex.A.11

12. Original Urban Land Tax Receipt for the period from 1972 to 1985 – Ex.A.12.

13. Certified Copy Registered Deed of Sale, registered as Doc.No.8 of 1990, SRO Alandur, executed by Ananthasayana Reddy's Legal Heirs in favour of S.P.Vairavan, 03.01.1990 – Ex.A.13

14. Certified Copy Estate duty demand notice, 27.02.1978 – Ex.A.14

15. Certified Copy Estate duty demand payment challan, 27.02.1978 – Ex.A.15

16. Certified Copy Estate duty assessment order, 27.02.1978 – Ex.A.16

17. Certified Copy Encumbrance Certificate for the period from 01.06.1969 to 21.01.1993, 29.01.1993 – Ex.A.17.

18. Certified Copy Encumbrance Certificate for the period from 01.06.1993 to 01.08.2005, 02.08.2005 – Ex.A.18

19. Certified Copy Encumbrance Certificate for the period from 01.06.2006 to 06.07.2007, 06.07.2007 – Ex.A.19

20. Certified Copy Assignment Agreement of Indian Bank, 07.12.2007 – Ex.A.20

21. Original Encumbrance Certificate for the period from 01.01.2007 to 29.01.2009 – Ex.A.21

22. Original Reply letter sent by Indian Bank, 16.02.2009 – Ex.A22

23. Original Reply Notice sent by the Indian Bank, 04.03.2009 – Ex.A23.

24. Original Reply sent by ARCIL, 23.03.2009 – Ex.A.24.

25. Original Reply sent by Indian Bank Appellate Authority, 15.04.2009 – Ex.A.25.

26. Certified Copy of Fair Order in IA No.302/1969 in OS 73/1949, 10.08.1972 – Ex.A.26.

27. Certified Copy of Order passed by the Additional District Munsif Court, Alandur in IA.No.8/2008 in OS 672/2007, 17.03.2009 – Ex.A.27

28. Certified Copy of Order passed by the Additional District Munsif Court, Alandur in IA.No.9/2008 in OS 672/2007, 17.03.2009 – Ex.A.28.

29. Copy of Advocate Commissioner's Repor in OS 73/1949 on the file of the Additional Sub Judge at Chengalpattu, 19.06.1971 – Ex.A.29.

30. Certified Copy of Sale Agreement between 2nd Defendant and 3rd Defendant, 20.07.1989 – Ex.A.30.

31. Certified Copy of Registered Sale Deed between the 2nd Defendant and 4th Defendant, 05.01.1990 – Ex.A.31.

32. Certified Copy of Registered Sale Deed between the 4th Defendant and 5th Defendant, 15.05.1994 – Ex.A.32

33. Certified Copy of Registered Sale Deed between the 5th Defendant and 6th Defendant, 05.01.1990 – Ex.A.33

(வா.சா.ஆ.4 உயில் நிரூப்பிக்கவேண்டுமென்பதால் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

(ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

உயிலின் சான்றிட்ட நகல் ஏற்கனவே வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 அசல் உயிலை இன்று தாக்கல் செய்கிறேன். (வா.சா.ஆ.4 உயில் 1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் உயிலை நிரூபிக்க வேண்டுமென்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**<u>1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.162/2010 P.W.1-சத்யநாராயணன் 02.11.2023**

**<u>ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1. Ex.A.34 – Certified copy of Preliminary Judgment dated 25.11.1954 passed in OS.No.73 of 1948.
2. Ex.A.35 – Served copy of Counter filed by the 7th Respondent/7th Defendant in IA.Nos.264 and 265 of 2009 in OA.No.15 of 2008 on the file of Hon'ble Debts Recovery Tribunal No.2 at Chennai.
3. Ex.A.36 – Served copy of Counter filed by the 8th Respondent/8th Defendant in IA.Nos.264 and 265 of 2009 in OA.No.15 of 2008 on the file of Hon'ble Debts Recovery Tribunal No.2 at Chennai.
4. Ex.A.37 – Certified copy of Order dated 30.09.2009 passed in IA.No.606 of 2009 in IA.Nos.264 and 265 of 2009 in OA.No.15 of 2008 on the file of Hon'ble Debts Recovery Tribunal No.2 at Chennai.
5. Ex.A.38 – Certified copy of Order dated 15.03.2010 passed in IA.Nos.264 and 265 of 2009 in OA.No.15 of 2008 on the file of Hon'ble Debts Recovery Tribunal No.2 at Chennai.

**<u>1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**வாதி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

O.S.No.162/2010 வழக்கை தவிர்த்து O.S.No.672/2007 மற்றும் O.S.No.290/2009 ஆலந்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். O.S.No.162/2010 வழக்கானது Declaration and recovery of Possession கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். O.S.No.672/2007 வழக்கு நிரந்தர தடை உத்தரவு கேட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். O.S.No.290/2009 வழக்கு 3.1.2009ல் ஏற்படுத்தப்பட்ட கிரய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளும் இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு O.S.No.174/2022 மற்றும் O.S.No.158/2016 என்று இந்த வழக்குடன் சேர்த்து நடத்தப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளிலும் என்னுடைய சொத்தின் உரிமையை எதிர்த்து வழக்காடினார்கள் என்றால் எதிர்த்து வழக்காடவில்லை, அந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு சொத்தின் உரிமை குறித்து எதிர் வழக்காடாத நிலையில் O.S.No.162/2010 வழக்கில் தாவா சொத்துக்கள் குறித்து விளம்புகை மற்றும் சொத்தில் சுவாதீனம் கேட்டு ஏன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் DRT உத்தரவின் பேரில் சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்ததாலும், DRT உத்தரவில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு குறித்து முடிவு செய்து கொள்ளுமாறும் சொன்னதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். DRT உத்தரவு எப்பொழுது போடப்பட்டது என்றால் 2008ல் DRT உத்தரவு போடப்பட்டது. நான் ஆலந்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் போட்டுள்ள வழக்கில் இந்தியன் வங்கி, ARC மற்றும் ராம்ராஜ் டிரேடிங் கம்பெனி ஆகியோர்கள் தரப்பினர்கள் என்றால் சரிதான். எனது உரிமையை பிரதிவாதிகள் dispute செய்ததால்தான் O.S.No.162/2010 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. DRT உத்தரவிற்கு பிறகு உடனடியாக உரிமை மற்றும் சுவாதீனம் கேட்டு ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் DRT உத்தரவானது மார்ச் 2010ல்தான் கிடைத்தது. அதன்பிறகுதான் வழக்கு தாக்கல் செய்தேன். 2009ல் வழக்கு தாக்கல்

செய்தபோது DRT Proceedings நிலுவையில் இருக்கும் விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் பிற்காலத்தில் விளம்புகை பரிகாரம் கேட்கப்போகிறேன் என்று ஆலந்தூர் நீதிமன்றத்தில் முன்அனுமதி ஏதும் பெற்றேனா என்றால் இல்லை. அவ்வாறு முன்அனுமதி பெறாததால் ஆலந்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த O.S.No.158/2016 வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறாகும். செங்கல்பட்டு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட O.S.No.73/1949 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின்பேரில் தான் இந்த வழக்கில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். O.S.No.73/1949 வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை 1972ல் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 இறுதிநிலை தீர்ப்பாணையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். O.S.No.73/1949 வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணை நகலை தாக்கல் செய்தது அசல் வழக்கு எண்ணில் 4ம் பிரதிவாதியான வெங்கட்ராம ரெட்டியார் என்றால் சரிதான். அந்த இறுதிநிலை தீர்ப்பாணையில் என் தந்தை, தேவராஜ ரெட்டியார், அனந்தசயன ரெட்டியார், புருஷோத்தம ரெட்டியார் மற்றும் ஸ்ரீராமுலு ரெட்டியார் ஆகியோர்கள் எதிர் மனுதாரர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 இறுதிநிலை தீர்ப்பாணையில் பிளாட் நம்பர் 4 வெங்கட்ராமனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 இறுதிநிலை தீர்ப்பாணையில் பிளாட் நம்பர் 3 தேவராஜ ரெட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. சி அட்டவணை சொத்துதான் ஒதுக்கப்பட்டது. பிளாட் நம்பர் 3 தேவராஜ ரெட்டியாருக்கு ஒதுக்கப்படவில்லை. வா.சா.ஆ.3ல் முதல் எதிர்மனுதாரர் தேவராஜ ரெட்டியார் என்றால் அது தவறாக டைப் செய்யப்பட்டுள்ளது. முதல்நிலை தீர்ப்பாணையின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1ல் முதல் பிரதிவாதி தேவராஜ ரெட்டியார், வழக்கை தாக்கல் செய்தது அனத்தசயன ரெட்டியார். இறுதிநிலை தீர்ப்பாணையை 4ம் பிரதிவாதி வெங்கட்ராம ரெட்டியார் தாக்கல் செய்துள்ளார். இறுதிநிலை தீர்ப்பாணையில் முதல் எதிர்மனுதாரர் தேவராஜரெட்டியார் என்றால் அது தவறாக டைப் செய்யப்பட்டுள்ளது. அனந்தசயன ரெட்டியார்தான் முதல் எதிர்மனுதாரராக வரவேண்டும். இறுதிநிலைய தீர்ப்பாணையில் தவறாக டைப் செய்யப்பட்டது எப்பொழுது தெரியவந்தது என்றால்

Recent ஆக தெரியவந்தது. இறுதிநிலை தீர்ப்பாணையின் நகலை பெற்ற பிறகுதான் தவறாக டைப் செய்யப்பட்டது தெரியவந்தது. வா.சா.ஆ.3 இறுதிநிலை தீர்ப்பாணையில் எதிர்மனுதாரர்களாக குறிப்பிட்டுள்ள rank ஆனது தவறாகும். வா.சா.ஆ.3 இறுதிநிலை தீர்ப்பாணையில் எதிர்மனுதாரர்களை தவறாக குறிப்பிட்டுள்ளதை திருத்தம் செய்வதற்கு முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்யவில்லை. வா.சா.ஆ.3 இறுதிநிலை தீர்ப்பாணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில்தான் உரிமை கோருகிறேன் என்றால் முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையின் பேரில் உரிமை கோருகிறேன். வா.சா.ஆ.3 இறுதிநிலை தீர்ப்பாணையின் படி பிளாட் நம்பர் 4 வெங்கட்ராமனுக்கு ஒதுக்கப்பட்டது, பிளாட் நம்பர் 3 தேவராஜ ரெட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது தவறாகும். 2வது எதிர்மனுதாரர் அனந்தசயன ரெட்டிக்கு பிளாட் நம்பர் 1 ஒதுக்கப்பட்டது என்றும், 3வது எதிர்மனுதாரரான என் தந்தைக்கு பிளாட் நம்பர் 2 ஒதுக்கப்பட்டது என்றும், 4வது எதிர்மனுதாரருக்கு பிளாட் நம்பர் 5 ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் இறுதிநிலை தீர்ப்பாணை தவறானது. மேற்படி பிளாட்டுக்கள் ஒதுக்கப்பட்டது குறித்து வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தின்படி தான் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இறுதிநிலை தீர்ப்பாணையில் அனந்தசயன ரெட்டிக்கு ஒதுக்கப்பட்ட பிளாட் நம்பர் 1தான் வழக்கு சொத்து என்றால் கிடையாது.

(1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)